தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்



வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
2022

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்.
த.பெ.14, பேராதனை

உள்ளடக்கம்

01. அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு 59

02. அத்தியாயம் 02- முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 76

03. அத்தியாயம் 03- நிதி முன்னேற்றம் 78

04. அத்தியாயம் 04- நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் 83

05. அத்தியாயம் 05- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை 85

06. அத்தியாயம் 06- மனிதவள விபரம் 87

07. அத்தியாயம் 07- இணக்கப்பாட்டு அறிக்கை 91

08. தாவரவியல் பூங்காக்கள் நம்பிகை நிதியம் - வருடாந்த செயலாற்றுகை 98

வருடாந்த முன்னேற்ற அறிக்கை 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொறுப்பு

1.1 அறிமுகம்

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமானது, தாவரவியல் நடவடிக்கைகள் தொடர்பிலான இலங்கையின் முன்னோடி நிறுவனமாகும். தாவர வெளிவாரிப் பேணுகை, தாவரங்களை இனங்காணல் மற்றும் அவை குறித்த கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் இலங்கையில் அலங்காரப் பூங்காவியலை ஊக்குவிப்பதற்கான ஆய்வு ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்கு பெரும் பங்களிப்பினைச் செய்வதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் திகழ்கிறது.

பிரித்தானியர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிரதான பூங்காக்களான பேராதனை அரச தாவரவியல் பூங்கா (1821), ஹக்கல தாவரவியல் பூங்கா (1861), கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா (1876) மற்றும் கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா ஆகியவற்றோடு முறையே 2013, 2015 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா மற்றும் அவிசாவலை சீதாவக ஈர வலய தாவரவியல் பூங்கா ஆகியன பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தாவரவியல் பூங்காக்களில் 10000 க்கும் மேற்பட்ட தாவர இனங்கள் பேணப்படுவதோடு அரிய வகைத் தாவரங்கள், காடுகளிலிருந்து அழிந்து போயுள்ள தாவரங்கள், இலங்கைக்கு மாத்திரம் உரிய தாவரங்கள், அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள் ஆகியன பாதுகாக்கப்பட்டுள்ளன. அத்தோடு கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா இலங்கையின் மூலிகைத் தாவரங்களின் பாதுகாப்புக்கும் பரவுகைக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

தேசிய தாவரக்கயமானது தாவரவியல் மற்றும் தாவர வகைப்படுத்தல் குறித்த ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதோடு தாவர வகைப்படுத்தல் குறித்த பல்வேறு தீர்மானங்களையும் உண்மைத்தன்மையை சான்றுப்படுத்தும் பணிகளையும் மேற்கொள்கின்றது. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகானது பூச்செடிச் செய்கை ஆய்வுகளில் ஈடுபடுவதன் மூலம் நாட்டில் பூச்செடிச் செய்கையை ஊக்குவிக்கும் பணியை மேற்கொள்கின்றது. இத்திணைக்களத்தின் கல்வி மற்றும் பயிற்சி நிலையமானது, குறுங்கால கற்கை நெறிகள்,1 வருட மற்றும் 2 வருட டிப்ளோமா கற்கை நெறிகளையும் வெவ்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடாத்துகின்றது.

தாவரவியல் பூங்காக்கள், பொது மக்களுக்கு ஓய்வெடுத்தலுக்கான வசதிகளை வழங்குவதோடு, உலகின் பல பகுதிகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட தாவரங்கள் தாவர இராச்சியத்தின் அழகையும் பன்மைத்துவத்தையும் பறை சாற்றுகின்றன. அத்தோடு தாவரப் பேணுகை, உயிரியல் பல்வகைமை, பூச்செடிச் செய்கை பற்றிய அறிவையும் பகிர்கின்றன.

1.2 . நிறுவனத்தின் நோக்கு,பணி மற்றும் நோக்கங்கள்

நோக்கு

தாவரவியல் மற்றும் அழகியல் நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் பேணிக்கொண்டு அயன வலயத்தின் மிகச் சிறந்த தாவரவியல் பூங்காவாக்குதல்

பணி

இயற்கையான மற்றும் செயற்கையான சூழல்களில் காணப்படும் தாவர வளங்கள் பற்றி ஆய்வு செய்தல், அவற்றின் நிலையான பேணுகை மற்றும் அவற்றின் மதிப்பை அறிந்து கொள்ளும் பணிகளுக்காக பொது மக்களுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு அவர்களை தாவரங்கள் பால் சமீபமாக்குதல்.

நோக்கங்கள்

- இலங்கைத் தாவரங்களின் முறையான வெளிவாரிப் பேணுகை
- விஞ்ஞான,சட்டரீதியான மற்றும் வியாபார நோக்கங்களுக்காக தாவர இனங்கானல் மற்றும் உறுதிப்படுத்தல்
- இலங்கையில் பூ வளர்ப்புத் துறையை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
- தாவர வளங்களை விஞ்ஞான பூர்வமாகவும் முறையாகவும் நிர்வகிப்பதன் ஊடாக சட்ட ரீதியிலான மற்றும் தாவரங்கள் சார்ந்த தொழில் துறைகளுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்
- சுற்றுலாத் துறையின் நிலைபேரான அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியினை ஊக்குவிப்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கும் சமூக மேம்பாட்டிற்கும் நேரடியான பங்களிப்பைச் செய்தல்.
- இலங்கையில் தாவர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபேரான பயன்பாடு தொடர்பில் எதிர்கால தலைமுறையினரை அறிவூட்டுதல்.

1.3 திணைக்களத்தின் பிரதான பணிகள்

- இலங்கையின் தாவரவியல் பல்வகைத் தன்மையினை பாதுகாப்பதில் வெளிவாரிப் பாதுகாப்பு முறைகளை செயல்வலுப் பெறச் செய்வதற்குத் தேவையான திட்டங்களை வகுத்தலும் செயல்படுத்தலும்

- கல்வி மற்றும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி இலங்கையின் தாவர வளங்கள் சம்பந்தமாகவும் தாவர வளங்களுடன் தொடர்புற்றுக் காணப்படும் பல்வேறு வகையான கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் சரியான தகவல்களையும் கலையறிவினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- இலங்கையில் பூச்செடிச் செய்கைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் தொழில் நுட்ப முறைகளை பரீட்சித்தலும் செயல்படுத்துதலும்.

- இலங்கையின் தேசிய தாவரவியல் பூங்காக்களை உயர்தரத்தில் பராமரித்துப் பேணல்.

- பொருத்தமான இடங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை உருவாக்குவதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்.


- அலங்கார தாவரவியல் ஆய்வினை இலங்கையில் விஸ்தரிப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்

- இலங்கையின் அடையாளம் காணப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க தாவரங்களை பாதுகாப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

- அநுராதபுரம் புனித அரச மரத்தின் ஆரோக்கியத்தைப் பேணுதல்.

- தேசிய தாவரவியல் ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் தேவையான தகவல்களை தேசிய சிவப்புப் பட்டியல் தயாரிப்பதற்கும் ஏனைய கொள்கை முடிவுகளுக்கான தீர்மாணங்களை எடுப்பதற்கான தரவுகளை வழங்குதல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அலகுகளும்

அரச தாவரவியல் பூங்கா, பேராதனை

1821ல் நிறுவப்பட்ட பேராதனை, அரச தாவரவியல் பூங்காவானது தாவரப் பேணுகை, மக்களுக்குக் கல்வியூட்டல் மற்றும் இலங்கையின் பொருளாதார, சூழலியல் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரும் பங்காற்றுகின்றது.

கண்டி நகருக்கு அண்மையில் 61.25 ஹெக்டெயார் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பூங்காவானது, பூமி அலங்காரப் பணிகள், தாவரவியல் ஆய்வு, சூழலியல் மற்றும் அலங்காரப் பூங்காவியல் நிலையமாகவும் மக்களுக்கு ஓய்வளிக்கும் இடமாகவும் திகழ்கின்றது..

தேசிய தாவரக்கயம்

இலங்கையின் தாவரங்களின் உலர்ந்த தாவரக்கய மாதிரிகளை பாதுகாத்து வைக்கும் இடமே தேசிய தாவரவக்கயமாகும். இங்கு 150000 க்கும் அதிகமான தேசிய மற்றும் வெளிநாட்டுத் தாவரங்களின் மாதிரிகள் முறையாக, ஆய்வுகளுக்கும் பரிசோதனைளுக்குமெனப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தாவரங்கள் பற்றிய 3500 க்கும் மேற்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் இதன் நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

தாவரக்கயத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள மாதிரிகள் தாவர வகைப்படுத்தல் ஆய்வுகளுக்காகவும் உயிரினப் பல்வகைமைத் தரவு வங்கியொன்றாக தாவரங்களை அடையாளம் காணும் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

ஹக்கல தாவரவியல் பூங்கா, ஹக்கல

ஹக்கல தாவரவியல் பூங்கா 1861 இல் உருவாக்கப்பட்டது. இப்பூங்காவின் தாவரங்கள் உப அயன வலயத்துக்குரியவையாகும். இங்கு உள்நாட்டுத் தாவரங்கள், மலையகத் தாவரங்கள், ஏனைய உப அயன வலய நாடுகளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட தாவரங்கள் ஆகியன முறையாக நடப்பட்டுள்ளன.

ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா - கம்பஹா

கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா 1876ல் றப்பர் பயிர்ச் செய்கையை இலங்கையில் ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. 17.4 ஹெக்டெயார் பரப்பைக் கொண்ட இப்பூங்கா வளமான வரலாற்றைக் கொண்டதும் தாவரவியல் மற்றும் அலங்காரப் பூச்செடியியல் கவர்ச்சியைக் கொண்டதுமாகும். இங்கு இலங்கையையும் வெளிநாடுகளையும் சேர்ந்த 2000 த்துக்கும் அதிகமான தாவர வகைகள் காணப்படுகின்றன.

பூச் செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு, பேராதனை.

பூச்செடிச் செய்கைத் துறையோடு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு இலங்கையின் பூச்செடிச் செய்கைத் துறையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பது இவ்வலகின் பணியாகும்.

பயிற்சி நிகழ்ச்சிகளையும் கள ஆலோசனைகளையும் இத்துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் குறித்த தகவல்களை வழங்குவதிலும் பூ வளர்போருக்கு பொருட்கள், உபகரணங்கள், தரமான உற்பத்தி சாதனங்கள் ஆகியனவற்றை பூ வளர்ப்போருக்கு வழங்குவதிலும் மாவட்ட மட்டத்தில் பூ வளர்ப்போர் சங்கங்களை அமைத்து அத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பதிலும் இப்பிரிவு முனைப்போடு ஈடுபடுகின்றது.

மூலிகைப் பூங்கா, கனேவத்த

இப்பூங்காவானது வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 21.04 ஹெக்டெயார் பரப்புக் கொண்ட இப்பூங்காவில் பல வகைகளையும் சார்ந்த மூலிகைத் தாவரங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாத, அரிய மூலிகைகளை பேணிப்பாதுகாப்பதும் மருந்து மூலிகைகளை முறையாக வளர்த்துச் சேமிப்பதும் இப்பூங்காவின் நோக்கங்களாகும். அத்தோடு மூலிகை விற்பனையிலும் முறையான மூலிகை வளர்ப்புப் பற்றிய அறிவை வழங்குவதிலும் இது ஈடுபடுகிறது.

உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை

இப்பூங்காவானது 130 வருடங்களுக்குப் பிறகு உள்நாட்டு நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது பூங்காவாகும். இது தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிரிஜ்ஜவில பகுதியில் அமைந்துள்ளது. 2006 ம் ஆண்டில் இதன் அபிவிருத்திப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2013 ம் ஆண்டு பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

உலர் மற்றும் அதி உலர் வலயத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறைமையின் கீழ் பாதுகாப்பதும் உள் நாட்டுப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பதும் இதன் பிரதான குறிக்கோளாகும்.

சீத்தாவாக்கை ஈரவலய தாவரவியல் பூங்கா

_அவிசாவலைக்கு அண்மையில் அமைந்துள்ள இப்பூங்காவின் அபிவிருத்திப் பணிகள் 2008 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2015ம் ஆண்டு மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்டது. இது 42.49 ஹெக்டெயார் பரப்பளவைக் கொண்டது.

ஈர வலய தாழ் நிலத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறை மூலம் பாதுகாப்பது இதன் பிரதான குறிக்கோளாகும்.

சுவஹஸ் மல் செவன, கொழும்பு

நாரஹேன்பிடவில் அமைந்துள்ள இவ்வலகானது, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கும் 'சுவஹஸ்மல்' சங்கங்களின் அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் பூச்செடியியல் உற்பத்திகளை சந்தைப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பப் பரிவர்த்தனை ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

அதி மேதகு ஜனாதிபதி மற்றும் மாண்பு மிகு பிரதமர் ஆகியோரது வாசஸ்தலப் பூங்காக்கள்

அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் கொழும்பு, கண்டி, நுவரெலியா, அனுராதபுர வாசஸ்தலங்களின் பூங்காக்கள் மற்றும் மாண்பு மிகு பிரதமர் அவர்களின் கொழும்பு மற்றும் நுவரெலியா வாசஸ்தலங்களின் பூங்காக்கள் இத்திணைக்களத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

பொதுநலவாய போர் சமாதிகள்

பொது நலவாய போர் சமாதிகள் கண்டி, ஜாவத்தை, பொரல்ல மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இரண்டு உலகப் போர்களிலும் இறந்த பொது நலவாய நாடுகளின் போர் வீரர்களை நினைவு கூரும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. இவையும் இத்திணைக்களத்தாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

பசுமை நிலையம், மீகல்லாவ

மீகல்லாவ பசுமை நிலையமானது வடமேல் மாகாணத்தில், குருனாகலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. தற்போது 2.43 ஹெக்டெயார் விஸ்தீரணம் கொண்டது. அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற இந்நிலையமானது பூச்செடியியல்துறையில் இத்திணைக்களத்தின் உள்ளகப் பணியாளர்களுக்கும் பிரதேசப் பொதுமக்களுக்குமான பயிற்சி வழங்குவதற்கும் தாவரங்களை உற்பத்தி செய்யும் நிலையமாகவும் செயற்படுகின்றது.

1.6 நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் - 2022

(மூலதன ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள்)

அரச தாவரவியல் பூங்கா-பேராதனை

- அரச தாவரவியல் பூங்காவின் இருநூற்றாண்டு நிறைவு விழாவினை மையப்படுத்திய ஆவணத்திரைப்படத் தயாரிப்பு, இருநூறாண்டு புத்தக வெளியீடு சிறுவர்களுக்கான கல்வி நிலையத்தை மேம்படுத்துதல் போன்ற தொடர் பணிகள் மேற்கொள்ளப்பட்டன



தாவரக்கயம் பற்றிய விழிப்புணர்வு

- அரச தாவரவியல் பூங்காவின் இருநூறு ஆண்டு நிறைவு விழா வேலைத்திட்டத்திற்கு அமைவாக, திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், திணைக்களத்தின் வளர்ச்சியில் பங்களிப்பு வழங்கிய திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களையும் தற்போது சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக பாராட்டு விழாவும் நடாத்தப்பட்டது.

- அரச தாவரவியல் பூங்காவின் 200 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிடடு (Botanic garden GALA) பல்வேறு தொடர் நிகழ்ச்சிகள் ஏற்பாடுசெய்து முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக பூச் செடிச் செய்கையினை ஊக்குவிப்பதற்காகவும் பூவளர்ப்போரது தயாரிப்புகளை விற்பனை செய்யவும விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. தாவர பன்முகத்தன்மை மற்றும் பல்லுயிர் பெருக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவூட்டும் நோக்கில் தேசிய தாவரக்கயம் பலவேறு நிகழ்ச்சிகளை நடாத்தியதுடன் தாவரங்களின் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் மக்கள் உயிர்வாழ்வதற்கு அவற்றின் முக்கியத்துவம் தொடர்பிலும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.



200 ஆண்டு நிறைவை குறிக்குமகமாக வெயிடப்பட்ட முத்திரைகள்



மகரந்தத் தோட்டம் பற்றி பாடசாலை மாணவர்களுக்கு கற்பித்தல்

- அரச தாவரவியல் பூங்காவின் இருநூறாவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் தபால் திணைக்கள முத்திரை பணியகத்தினால் மூன்று நினைவு தபால் முத்திரைகள் மற்றும் நினைவு தபால் அட்டை ஒன்றும் இவ்வாண்டு வெளியிடப்பட்டது.

- அரச தாவரவியல் பூங்காவின் வரலாறு, பரவல், தாவர பன்முகத்தன்மை மற்றும் ஏனைய தாவரவியல் பூங்காக்கள் தொடர்பிலான தகவல் அடங்கிய கட்டுரைகள் வெளியிடப்பட்டன, மேலும் இதுவை தொடர்பான வானொலி நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.



சிறுவர் கல்வி வளாகப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன

- பொதுமக்களுக்கு அன்றாடம் பார்வையிட முடியாத பூங்காவில் உள்ள தாவரப் பாதுகாப்பு இல்லங்களை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டு பூமி அலங்காரத் தாவரங்கள் மற்றும் ஓக்கிட் போன்ற தாவர நாற்று மேடைகளில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. தாவர இல்லங்கள், அலங்காரத் தாவர இல்லங்கள், அந்தூரியம் தாவர இல்லம் என்பன தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. இயற்கை சூழல், அரச தாவரவியல் பூங்கா என பல்வேறு தலைப்புகளில் சித்திரங்கள் வரைவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டதுடன் அவர்களின் படைப்புகளை காட்சிப்படுத்த சித்திரக் கண்காட்சிஒன்றும் நடைபெற்றது.



புதுப்பிக்கப்பட்டுள்ள ஜிம்கானா கூடம்

- 200 ஆவது நிறைவு விழாவை கொண்டாடும் விதத்தில் பல்வேறு கலாச்சாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உணவுகளை கொண்ட உணவுக் கண்காட்சி ஒன்றும் நடத்தப்பட்டதுடன் மானுடத் தாவரவியல் (Ethno Botany) குறித்து சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன

- நிதிக் கொடுக்கல் வாங்கல் சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு பார்வையாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில்வங்கிக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன. பூங்காவிற்கு வருபவர்களுக்கு தமக்குத் தேவையான நினைவு பரிசுக கூடமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது

- பூங்காவின் கவர்ச்சியையும் அலங்காரத்தையும் மேம்படுத்தும் நோக்கிலான நில அபிவிருத்திப் நடவடிக்கைகள் வடிகான் தொகுதியின் புனரமைப்புப் போன்ற பணிகள் நடைபெறுகின்றன

- தாவரப் பேணுகை நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 101,468 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன

- .பூங்காவின் வரலாறு ,தாவர பயன்பாடு ,பூங்காக்களின் பரிணாமம் மற்றும் பூங்காக்களின் மரபுரிமை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் விதத்தில் தகவல் நிலைய மொன்றுடனான நூதனசாலை அரச தாவரவியல் பூங்காவினுள் நிர்மாணிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் அதன் உள்ளக வடிவமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது.நாட்டில் நிலவிய எரி பொருள் தடடுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக அதன் நிறைவுப் பணிகள் பின்போடப்பட்டது.இவ்வாண்டு அப்பணிகள் பூரணப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது.



பணிகள் நிறைவடைந்துள்ள பெரோ நீர் தாங்கி

- பூங்காவிற்கான நீர் விநியோகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பெரோசிமென்ட் தொட்டியின் கட்டுமானப் பணிகள் தொடர்வதுடன், குழாய்களின் உள்ளக வடிவமைப்பும் நிறைவடைந்துள்ளது.



பன்னத தோட்டப் பகுதியின் அபிவிருத்திப் நடவடிக்கைகள

- சந்தையில் நிலவிய பொருட்தட்டுப்பாடு மற்றும் மூலப்பொருட்களின் விலை ஏற்றம் காரணமாக அலுவலக பணிகள் மற்றும் பூங்கா பராமரிப்பு என்பனவற்றின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அலுவலக வாகனத் தரிப்பிடம் 40 சதவீத பணிகள் முடிவடைந்த நிலையில் நிறுத்தப்பட்டது. பார்வையாளர்களின் பொது வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நிறுவப்பட்ட துவைட்ஸ் வசந்த வீடு, பூங்காவிற்கு அருகிலுள்ள வசந்த வீடு, அளுத்வத்தைக்கு அருகிலுள்ள வசந்த வீடு மற்றும் தாவர நாற்று மேடைகளுக்கு அருகிலுள்ள வசந்த வீடு ஆகியவற்றின் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்தன.



பூங்க நுழைவாயில் பகுதியில் நிறுவப்பட்டுள்ள நிறுவப்பட்ட நினைவு பரிசு விற்பனைக் கூடம்

- பூங்காவின் தாவரச் சேகரிப்புகளை உயர்தரத்தில் பராமரிப்பதற்காகக் கட்டப்பட்டதாவரப் பேணுகை இல்லத்தின் பணி நிறைவடைந்துள்ளது.
- பூங்காக்களில் பணிபுரியும் அலுவலர்களின் 02 உத்தியோகபூர்வ இல்லங்களின் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பணியாளர் ஓய்வறைக்கு மேலதி அறை ஒன்றை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.



பூமி அலங்காரப் பணிகள்

- இதற்கு மேலதிகமாக குடிநீர் குழாய்களின் மேம்பாடு, கழிவுநீர் வடிகான்களை சீர் செய்தல், உள்ளகப் பாதைகளின் மேம்பாடுகள் , கழிப்பறை தொகுதிகளை மேம்படுத்தல், உணவகத்தின் அபிவிருத்தி போன்ற பணிகள் பார்வையாளர்களின் வருகையை அதிகரிகும் நோக்கிலும் மற்றும் பூங்காவின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனும் முன்னெடுக்கப்பட்டன ஷ

ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா, கம்பஹா

பூங்காவினுள் பார்வையாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தவும் பேணுகை நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் மேற்கொள்ளவும் பூங்காவில் புதிய வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

- பூங்காவின் வருமானத்தை மேலும் அதிகரக்கும் நோக்கில் பூங்காவிற்கு வருகை தருகின்ற பார்வையாளர்களுக்கு பூச் செடிகளை வாங்குவதற்கு வசதியாக தாவர விற்பனை நிலையம் நிறுவப்பட்டு அதன் பணிகள் இவ்வாண்டு நிறைவு பெற்றது
- பூங்காவில் காணி அபிவிருத்தி , பூமி அலங்கார மேம்பாட்டு பணிகளுடன் பூங்காவினை அழகுபடுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன
- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 36,591 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.
- கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கழிவறை தொகுதி அமைக்கும் பணிகள் இவ்வாண்டு நிறைவு பெற்றது.

ஹக்கல தாவரவியல் பூங்கா

பூங்காவினுள் பார்வையாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தவும் பேணுகை நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் மேற்கொள்ளவும் பூங்காவில் புதிய வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

- மண் அரிப்பைக் குறைப்பதற்காக தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் பூங்காவிலுள்ள நாற்றுமேடைப் பகுதிகளின் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

- பூங்காவின் உள்ளகப் பாதைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டது

- இத் திணைக்களத்தின்உத்தியோகத்தர்கள் மற்றும் உல்லாசப் பயணிகளின் வசதிக்காகவும் சுற்றுலா விடுதி புதுப்பிக்கப்பட்டது

- பூங்கா ஊழியர்களின் சேவை திருப்தியை மேம்படுத்துவதற்கு தேவையான வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களின் புனரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன.

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 195,829 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.

தேசிய பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர பூ வளர்ப்போரை பலப்படுத்தி அவர்களது பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இவ்வருடமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.



தாவர இல்லத்தின் அபிவிருத்திப் பணிகள்

- நாடாளாவிய ரீதியில் பூச்செடியியலை விஸ்தரிக்குமுகமாக பூ வளர்ப்போர் சங்கங்கள் 203 செயற்படுவதோடு அவற்றினூடாக சுமார் 8000 பேர் நன்மையடைகின்றனர். அந்தூரியம், ஓக்கிட், ரோசா, ஜெர்பரா, வெட்டு இலைகள் மற்றும் இழைய வளர்ப்பு ஆகிய துறைகள் பற்றிய ஒருநாள் பயிற்சி நெறிகள் மூலம் 13,256 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

- பூ வளர்ப்பு அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவின் ஊடாக சுமார் 198,813க்கும் மேற்பட்ட ஓக்கிட், அந்தூரியம் மற்றும் அலங்கார இலை தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.



தாவரக் கண்காட்சி நடவடிக்கைகளின் மேம்பாடுகள்

- பூ வளர்ப்போரது உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு சிற்றளவிலான 165 கண்காட்சிகள் நடாத்தப்பட்டன. பூ வளர்ப்போரது 1052 நாற்று மேடைகளுக்கு சென்று களப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 213,752 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.



நீர்த் தாவர சேகரிப்புகள்

- நாட்டின் பூச்செடியியல் தொழிற்துறையை மேம்படுத்தும் பொருட்டு நிகழ்கால மற்றும் எதிர்கால களத் தேவைகளை ஈடு செய்யும் வகையிலான பல ஆய்வுகள் செய்யப்பட்டதோடு தற்போது பூ வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அத்தோடு வர்த்தக ரீதியிலான பூ வளர்ப்பு, நாற்று மேடை முகாமைத்துவம், நோய் மற்றும் பீடை முகாமைத்துவம் பற்றிய விடயங்களில் தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இலவச ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

- அனைத்துப் பூங்காக்களதும் பூச்செடிச் செய்கை அலகுகளின் நாற்றுமேடைகள் உயர் தரத்தில் பேணப்பட்டதோடு, அவற்றின் அபிவிருத்திக்குத் தேவையான வளர்ப்பு ஊடகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. பூச்செடியியல் பற்றிய புத்தகங்கள் மற்றும் பிரசுரங்கள் அச்சிடப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- பூச்செடியியல் அபிவிருத்தி பிரிவின் முக்கிய தேவையாக இருந்த தாவர இல்லத்தின் கட்டுமானமானப் பணிகள் தொடங்கப்பட்டு அதன் கட்டுமானப் பணிகள் பூரணப்படுத்தப்பட்டு 200 ஆண்டு நிறைவு விழாவின் ஒரு அங்கமாக பார்யையாளர்களுக்கு திறந்து வைக்கப்பட்டது. பார்வையாளர்கள் இத்தாவர இல்லததில் பல்வேறு வகையான விசித்திர அலங்காரத் தாவரங்களைப் பார்ப்பதற்கான சந்தர்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

- பூ வளர்ப்பு ஆராய்ச்சி தொடர்பான தேசிய மாநாடு இந்த ஆண்டும் நடத்தப்பட்டு, பூ வளர்ப்புத் துறையின் அபிவிருத்திக்கான ஆய்வுக் கட்டுரைகள் 14 சமர்ப்பிக்கப்பட்டன.
- **5 புதிய கலப்பின அந்தூரியம் வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அவற்றின் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டது.**
- தாவரங்களின் தரத்தை பாதுகாத்து , ஆரோக்கியமான தாவரங்களை உற்பத்தி செய்வதன் மூலம் பூங்காக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் என நாற்று மேடைகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் இடம்பெற்றன.

கல்வி மற்றும் பயிற்சி நிலையம்

பேராதனை தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் வசதிகள் மேம்படுத்தப்பட்டு திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- 176 மாணவர்கள பூச்செடியியல் நில அலங்காரம் பற்றிய தொழில்நுட்பப் பூபயிற்சியை முடித்துள்ளதுடன், 55 பேர் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்
- நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர்களுக்கான தேசிய தொழில் பயிலுனர் தகைமைச் சான்றிதழ் - 4ம் மட்டத்தினை (NVQ- Level 4) வழங்கும் ஒரு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு 34 பேர் தம்மைப் பதிவு செய்து கொண்டு கற்கையைத் தொடர்கின்றனர்.
- மேலும், 136 மாணவர்கள் நடைமுறப் பணியிடைப் பயிற்சிக்காக பதிவுசெய்துள்ளதுடன் பல்கலைக்கழகத்தில் பூமி அலங்கார நிர்மாணத் துறையில் கௌரவ பட்டம் பெற்ற 15 மாணவர்கள் ஒரு மாத தொழில்முறை பயிற்சி வகுப்பை முடித்தனர்.
- ரோசா வளர்ப்பு, நாற்றுமேடை முகாமை, தாவர அடையாளம் காணல், பூச்செய்கையின் பெருமதி சேர்த்தல், பூ அலங்காரம், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பம், நில அலங்காரம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து 2,058 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது



கழிப்பறை தொகுதியின் கட்டுமான பணிகள்

சீதாவக ஈர வலய தாவாரவியல் பூங்கா, அவிசாவலை

பூங்காவினுள் பார்வையாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தவும் பேணுகை நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் மேற்கொள்ளவும் பூங்காவின் புதிய வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

- பூங்காவில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சேவை உற்பத்தித்திறன் மற்றும் சேவை திருப்தியை மேம்படுத்தும் நோக்கில் ஊழியர்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான குளியலறைகள் மற்றும் கழிப்பறை அமைப்புகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், ஒப்பந்ததாரரின் தாமதம், மூலப்பொருட்களின் விலையேற்றம் போன்ற பிரச்சினைகளால் அப் பணிகளளை நிறைவு செய்ய முடியவில்லை.
- பூங்காவின் பராமரிப்பு, நாற்றுமேடை பகுதிகள் மற்றும் வடிகால் தொகுதிகள் என்பவற்றை முறையாக பராமரிப்பதற்கு தேவையான தோட்ட உபகரணங்கள் கொள்வனவும் நில அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 31,162 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன

- ரோசா வளர்ப்பு, நாற்றுமேடை முகாமை, தாவர அடையாளம் காணல், பூச்செய்கையின் பெருமதி சேர்த்தல், பூ அலங்காரம், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பம், நில அலங்காரம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து 26பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது



நில அபிவிருத்திப் பணிகள்

மிரிஜ்ஜவில, உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை

பூங்காவின் அடிப்படை மற்றும் பொதுமக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு இவ்வருடமும் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- பூங்காவிற்கான நீர் வழங்கல் முறைமையினை மேம்படுத்தும் நோக்கில் கொஹம்கஸ் வாவி புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன் பூங்கா அபவிருத்திப் பணிகளளும் மேற்கொள்ளப்பட்டன..

- பூங்காவிற்கான வழிகாட்டல் பலகைகள் தேவைக்கேற்பபுதுப்பிக்கப்பட்டு சமிக்கைப் பலகைகளும் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

- தொழில்நுட்ப அபிவிருத்திகள், வடிகால் அமைப்பு திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன் காணி அபிவிருத்தி மற்றும் நில வடிவமைப்புகள் போன்ற தொழில்நுட்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன



நில அபிவிருத்திப் பணிகள

- பூங்காவின் தாய்த் தாவரங்களின் சேகரிப்பை பலப்படுத்தத் தேவையான தாவர வகைகள் கொள்வனவு செய்யப்பட்டதோடு உயிர்த்தாவரச் சேகரிப்பும் மேம்படுத்தப்பட்டது. மேலும் இப்பூங்காவில் 29,966 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன

- ரோசா வளர்ப்பு, நாற்றுமேடை முகாமை, தாவர அடையாளம் காணல், பூச்செய்கையின் பெருமதி சேர்த்தல், பூ அலங்காரம், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பம், நில அலங்காரம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து 475 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது

கனேவத்த மூலிகைப் பூங்கா அபிவிருத்தி

- பூங்காவின் வெளிப்புற தோற்றத்தை அழகுபடுத்தும் நோக்கில் கட்டிடங்கள் மற்றும் பிற கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை சிறப்பாக மேற்கொள்ளப்படடு பூங்காவை உயர் மட்டத்தில் பராமரித்துப் பேணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- பூங்காவிற்கு வருகை தருகின்ற பார்வையாளர்களின் வசதிகளை மேலும் மேம்படுத்தும் வகையில், புதிய கழிவறை தொகுதியொன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 50% நிறைவடைந்துள்ளது.

- பூங்காவில் புதிதாக மரங்களை நடும் செயல் திட்டம் அமுல்படுத்தப்பட்டு, 28,341 மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, புதிய தாவர சேகரிப்பு உட்பட தாவர சேகரிப்புகள் மேம்படுத்தப்படடுள்ளன.

- மூலிகை பற்றிய விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் 202 பேருக்கு மூலிகைத் தாவரப் பயன்பாடு, மதிப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து விரிவுரைகள் வழங்கப்பட்ட



பூங்காவின் நீர்த் தாவர சேகரிப்பு

மீகல்லாவ பசுமை இல்லப் பயிற்சி நிலையம்

- தாவரங்கள் மற்றும் பூங்காவை பராமரித்தல் உள்ளிட்ட நில அபிவிருத்திப்பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்படுட்டன.

- இவ் ஆண்டும் தாவரங்கள் நடுகை திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட தாவரங்கள் உருவாக்கப்பட்டு தாவர சேகரிப்புகளும் மேம்படுத்தப்பட்டன

- பல்வேறு தாவரங்கள் இவ்வலாகத்தில் பயிர்செய்யப்பட்டுள்ளதுடன் அன்றாட பழுதுபார்த்தல் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன.

- இந்த ஆண்டும் தாவரங்கள் நடுகை திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் 14,629 க்கும் மேற்பட்ட நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, புதிய தாவர சேகரிப்புகளை உருவாக்குதல் உட்பட தாவர சேகரிப்புகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அனைத்துப் பூங்காக்களையும் செயற்றிறன் மிக்க வகையில் முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான புதிய பொறிகள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூங்கா உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு, பாவனையில் இருக்கும் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூங்கா உபகரணங்கள் மேம்படுத்தப்பட்டு பூங்காக்களின் அலங்காரம் உயரிய முறையில் பேணப்பட்டன.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களது கொழும்பு 01, கண்டி, நுவரெலியா, அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைகள், மாண்புமிகு பிரதமர் அவர்களது கொழும்பு அலரி மாளிகை மற்றும் நுவரெலியா வாசஸ்தலம் ஆகியவற்றின் பூங்காக்கள் சிறந்த முறையில் பேணப்பட்டன.

அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரது உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களது பூங்காக்களை அழகுபடுத்தி ஒழுங்குபடுத்துவதற்கென திட்டமிடப்பட்ட பிரகாரம் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அனுராதபுர புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியம் பேணல் நடவடிக்கைகள் இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டன. மேலும் அனுராதபுர புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியம் பேணும் நடவடிக்கையாக காற்றினால் ஏற்படும் சேதத்தை குறைக்கும் பொருட்டு அவ்வலாகத்தில் நடுவதற்காக பிஹிம்பிய,நெல்லி, ,மருதம்,வேப்பம்,வாகை,கூலம்,ஹலம்பை,இழுப்பை,நாகை மற்றும் புளியம் போன்ற மரக் கன்றுகள் 120 வழங்கப்பட்டன.


அனைத்து பூங்காக்களின் நில அலங்காரப் பணிகள் சிற்பான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், நடைபாதைகள், உள்ளக வீதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. மேலும் பூங்காக் சிறப்பாக பராமரிக்கப்பட்டு அவற்றின் தரம் மிகச்சிற்பாக பேணப்பட்டது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்தி திட்டங்களும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களுத்தின் மூலதன நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்துடன் தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் பின் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.


1.7 பார்வையாளர்களின் வருகை

இவ்வருடம் பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த மொத்தப் பார்வையாளர்கள் எண்ணிக்கை 1,876,370 ஆகும். இவர்களுள் 1,773,048ஃ உள்நாட்டவர்களும் 103,322 வெளிநாட்டவர்களும் அடங்குகின்றனர்

1.7.1 2022 ம் ஆண்டு பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை



பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை



2021 மற்றும் 2022 பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை ஒப்பீடு

1.7. 2. 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை தாவரவியல் பூங்காக்களுக்கான பார்வையாளர்களின் வருகை பற்றிய தகவல்

விபரம்	ஆண்டு				
	2018	2019	2020	2021	2022
உள்நாட்டு பார்வையாளர்கள்	2,364,649	2,098,202	642,573	714,493	1,773,048
வெளிநாட்டு பார்வையாளர்கள்	463,695	331,888	93,304	18,412	103,322
மொத்தம்	**2,838,344**	**2,430,090**	**735,877**	**732,845**	**1,876,370**

2018 ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை சுற்றுலாப் பயணிகள் மூலம் திணைக்களத்துக்குக் கிடைத்த மொத்த வருமானம்.

விபரம்	ஆண்டு				
	2018	2019	2020	2021	2022
உள்நாட்டு பார்வையாளர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் (ரூ.மில்)	111.34	130.937	67.91	64.60	143.31
வெளிநாட்டு பார்வையாளர்கள் கிடைக்கப்பெற்ற வருமானம் (ரூ.மில்)	673.42	537,092	181.829	35.785	200.18
மொத்தம் (ரூ.மில்)	**784.76**	**668.029**	**249.739**	**100.385**	**343.49**

1.9 நிதி முன்னேற்றம்

பிரதான பூங்காக்களிலும் ஏனைய அலகுகளிலும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டதோடு 2022ம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் திகதிவரை திணைக்களத்தின் நிதி முன்னேற்றம் 99% ஆகும்.

2022ம் ஆண்டின் செலவு விபரம்

நிதி மூலம்		மொத்த ஒதுக்கீடு (ரூ. மில்.)	மெய்ச் செலவு (ரூ. மில்.)	%
மூலதனச் செலவு	கூட்டு நிதியம்	96.875	93.958	97
	தாவரவியல் பூங்கா நம்பிக்கை நிதியம்	74.225	74.225	100
மொத்த (மூலதனச் செலவு)		**171.1**	**168.183**	**98.2**
மீண்டெழும் செலவுகள்		576.2	572.516	99.3
முழு மொத்தம்		**747.3**	**740.699**	**99.1**

அத்தியாயம் 02- முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 விஷேட வெற்றிகள்

- தாவரவியல் பூங்காவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவுப் பரிசுகள் மற்றும் நினைவுப் பொருற்களை விற்பனை செய்வதற்காக விற்பளை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் தாவரவியல் பூங்காக்கள் பற்றிய தகவல்கள், அனைத்து மலர்கள் மற்றும் மரங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய நினைவு பரிசுகள் , நினைவு சின்னங்களை வாங்குவதற்கான வாய்பு இதன் மூலம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டள்து
- அரச தாவரவியல் பூங்காவின் 200வது ஆண்டு நிறைவு விழாவின் ஆரம்பநிகழ்வு கௌரவ. சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் உத்தியோகபூர்வமாக துவங்கி வைக்கப்பட்டது.
- கோவிட் தொற்று பரவல் காரணமாக நாடு முற்றாக மூடப்பட்ட நிலையிலும் அனைத்து தாவரவியல் பூங்காக்களையும் சிறப்பாக பராமரிக்க முடிந்தமை.
- கோவிட் தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு நாடு மீண்டும் திறக்கப்பட்டு குறுகிய காலத்தில் பூங்காக்களுக்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க முடிந்தமை

2.2 சவால்கள்

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு காரணிகளால் ஏற்படுகின்ற அரசியல்,பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்களின் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு ஏற்படுகின்ற அச்சுருத்தல்கள்.

- காலநிலை மற்றும் சுழல் மாற்றங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்

- புதிய தாவரவியல் பூங்காக்களை அமைப்பதற்கு பொருத்தமான காணிகளை அடையாளம் கண்டு அவற்னை பெற்றுக்கொள்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள்

- சர்வதேச மட்டத்திலான பிரச்சாரங்களை மேம்படுத்தல்

2.3 இலக்குகள்

- சகல தாவரவியல் பூங்காக்களையும் சர்வதேச தரச்சிறப்பைப் பேணி தெற்காசிய வலயத்தில் சிறந்த தாவரவியல் பூங்காக்களாக மாற்றியமைத்தல்
- இலங்கையின் தாவரங்கள் தொடர்பில் தேசிய தரவுத்தளத்தை மேம்படுத்திப் பராமரித்தல்
- தேசிய மூலக்கூறு உயிரியல் ஆய்வு கூடத்தை அமைத்தல்
- இலங்கைக்குரிய தாவர இனங்களில் 50% த்தினை 2030 ஆம் ஆண்டாகும் போது தாவரவியல் பூங்காக்களில் வெளிவாரிப் பேணுகை செய்தல்
- பூங்காவியல் அலங்காரம் மற்றும் பூச் செடியியல் தொடர்பில் பட்டப்படிப்பை நடாத்தும் நிறுவனமாக அபிவிருத்தி செய்தல்
- பூங்காவியல் அலங்காரம் மற்றும் பூச் செடியியல் தொடர்பில் தேசிய டிப்லோமா பயிற்சி நெறியின் NVQ 5,6 மட்டத்தினை ஆரம்பித்து தொழில் தேர்ச்சி சான்றிதழை வழங்குதல்
- சூழல்சார் விஞ்ஞானக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
- உரிய SDG இலக்குகளை பூர்த்தி செய்தல்.
- ஓன்லைன் நுழைவுச் சீட்டு முறையினை அறிமுகப்படுத்துதல்
- பார்வையாளர்களை கவருவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.
- உற்பத்தித்திறன் தங்க விருதைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்

- ❖ சிறந்த சுற்றுலா மையம் எனும் விருதைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- ❖ சகலருக்கும் முறையான, சம தரத்திலான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் பூராகவும் கற்கும் வாய்ப்பை வழங்குதல்
- ❖ உயிரியல் பல்வகைமையினைப் பாதுகாத்து பாலைவனமயமாக்களைத் தடுத்து தாவரங்களைப் பாதுகாப்பதின் ஊடாக சூழல் சமநிலையைப் பாதுகாத்தல்
- ❖ தற்போது தாவரவியல் பூங்காக்கள் அமைக்கப்படாத் விஷேட பிராந்தியங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை அமைத்தல்
- ❖ சிறிய மற்றும் நடுத்தர பூக்கள் மற்றும் அலங்காரத் தாவரங்கள் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊக்குவிப்புக்களை அதிகரித்து பூ வளர்ப்போர் சங்கங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

அத்தியாயம் 3- நிதி முன்னேற்றம்

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

3-2 நிதி நிலைமைக் கூற்று

3-3 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

3-5 வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை ரூ.000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ)	இறுதி வருமான மதிப்பீடு %
20.03.02.19	தாவரவியல் பூங்காக்களின் வருமானம்	700.00	300	388	129%

3-6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின்செயலாற்றுகை ரூ.000

ஒதுக்கீட்டு வகை	**ஒதுக்கீடு**		**உண்மையான செலவினம்**	இறுதி **ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு**
	அசல் ஒதுக்கீடு	**இறுதி ஒதுக்கீடு**		
மீண்டெழும்	576,200	576,200	572,516,451.90	99 %
மூலதனம்	575,480	575,480	168,1883,197.69	99 %

3.7 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூ.000

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	2022.12.31 திகதிய கற்றாய்வுச்சபை அறிக்கைப் படி மீதி	2022..12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கைப்படி மீதி	ஏதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது.	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	*	661,691,908.82		
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	*	212,711,244.02		
9153	காணி	*	693,915,250.00	-	-
9154	அருவமான சொத்துக்கள்	-	-	-	
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	
9160	நடைபெறும் பணிகள்	-	-	-	
9180	குத்தகை சொத்துக்கள்	-	-	-	

* மதிப்பீட்டு சபைகள் நியமிக்கப்பட்டுள்ளன. 31.03.2023க்கு முன் மதிப்பீட்டு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு சகல அலகுகளுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.
அதன்படி, 31.03.2023க்கு முன், திணைக்களத்தின் அனைத்து சொத்துக்களுக்கும் கணக்கு வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. (காணி மற்றும் கட்டிடங்களுக்கு, மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட வேண்டியுள்ளது.)

3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை (பின்னிணைப்பு 01)

அத்தியாயம்-4 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

பாதீட்டு 2022 (ரூபா)		குறிப்பு	உண்மை நிலை 2022 (ரூபா)	2021 (ரூபா)	
300,000,000	வருமானப் பெறுகைகள்		388,379,319	135,038,572.00	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ--1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	388,379,319	135,038,572.00	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		388,379,319	135,038,572.00	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	725,045,954.00	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		333,361,000	583,881,000.00	ஏசீஏ-3
-	வைப்புகள்		135,651,106	111,193,676.00	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		31,640,230	29,971,278.00	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		500,652,336	725,045,954.00	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		889,031,655	860,084,526.00	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		-	-	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		-	860,084,526.00	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	509,467,750.00	
460,752,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	460,178,184	406,683,843.00	
114,048,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	111,421,407	101,283,323.00	ஏசீஏ-2(ii)
1,400,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	1,320,040	1,476,034.00	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	24,550.00	
576,200,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		572,919,632	509,467,750.00	
	மூலதனம் செலவினம்				
28,850,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	26,944,645	23,433,650.00	
22,025,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	21,525,172	91,767,956.00	
74,225,000	மூலதன மாற்றல்கள்	12	74,225,000	78,595,403.00	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
500,000	திறன் விருத்தி	14	437,475	487,131.00	
45,500,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	45,050,906	36,755,511.00	
171,100,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		168,183,198	231,039,652.00	
	வைப்புக் கொடுப்பனவுகள்		132,030,235	98,458,414.00	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		31,132,742	30,451,860.00	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		163,162,977	128,910,274.00	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		904,265,806	869,417,676.00	
-	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(15,234,151)	(9,333,150.00)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(15,234,151)	(9,333,150.00)	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	7,813,559,403	7,727,804,507
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	95,151,703	95,659,192
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
		7,908,711,106	7,823,463,698
மொத்த சொத்துக்கள்			
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(144,483,603)	(140,355,244)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		7,813,559,403	7,727,804,507
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	239,635,307	236,014,436
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		7,908,711,106	7,823,463,698

பக்க இலக்கம் ....01... முதல் ...55.. வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்.பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் ...56.... முதல் ...64.... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2023.02.21

W. A. Chulananda Perera
Secretary
Ministry of Tourism and Lands
2nd Floor, Asset Arcade Building,
51/2/1, York Street, Colombo 01.

S. A. Kuthuraja
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2023.02.14

ආචාර්ය එස්.ඒ. කුත්තරාජා
අධ්‍යක්ෂ ජනරාල්

2023/02/14
பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ ஆணையாளர்(நிதி)
பெயர்:
திகதி :

வீ.ஜீ.ஜீ. நதிகா கமகே
பிரதம கணக்காய்வாளர்
ජ්‍යෙෂ්ඨ විගණකාධිකාරී

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	388,379,319	135,038,572
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	38,103,292	28,445,549
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	333,361,000	583,881,000
முற்பணங்களை அறவிடல்	30,472,657	29,382,244
வைப்புக்களின் பெறுகை	135,651,106	111,193,676
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**925,967,374**	**887,941,041**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	643,629,437	568,602,369
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	75,545,040	80,095,987
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	22,104,747	18,564,455
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	-
முற்பணக் கொடுப்பனவு	31,132,742	30,451,860
வைப்புக் கொடுப்பனவு	132,030,235	98,458,414
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**904,442,202**	**796,173,085**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**21,525,172**	**91,767,956**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:	21,525,172	91,767,956
முதலீடுகளின் கொள்வனவு	**21,525,172**	**91,767,956**
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)		
	(21,525,172)	**(91,767,956)**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)		
	(0)	**-**
(எ)=(இ)+(ஊ)		
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	-	-
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:	-	-
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள்

	குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீத்ததை (%) உண்மையான வெளியீடு		
		100% - 90 %	**75% - 89%**	**50 % - 74 %**
1	ாவரங்கள் தொடர்பிலான தேசிய தரவு வங்கியை இற்றைப்படுத்தல			
	• நடாத்துப்பட்ட விஷேட கூட்டங்கள்	√		
	• வெளிக்கள சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கை			√
	• அடையாளம் காணப்பட்ட தாவர இனங்கள்		√	
	• அடையாளம் காணப்பட்ட புதிய தாவர இனங்கள்			√
2	தாவர வெளிவாரிப் பேணுகை முறைமையுனூடகப் பாதுகாத்தல்			
	• தாவர வெளிவாரிப் பேணுகை முறைமையுனூடகப் பாதுகாக்கப்பட்ட தாவரங்கள்	√		
	• வெளிக்கள சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கை			√
3	உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகள்	√		
4	மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்	√		
5	தேசிய தாவரக்கய அபிவிருத்திப் பணிகள்			
	• புதிய கருவிகள் கொள்வனவு		√	
6	கல்வி,பயிற்சிகள் மற்றும் தகவல்களை வழங்குதல்			
	• கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்			√
	• பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்			√
	• தகவல் வழங்கப்பட்ட நபர்கள்	√		
7	ூங்காக்களுக்கு வருகைதரும் பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தல்			
	• குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்		√	
	• புதிய கட்டிடங்களின் நிர்மாணப் பணிகள்			√
8	பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்			
	• பூச்செடியியல் கண்காட்சிகள்			√
	• பூ வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்புக்கள்.			

	• பூ வளர்ப்போருக்கு வினியோகிக்கப் பட்ட பொருட்கள்	√		
9	அலுவலர்களின் வசதிகளை மேம்படுத்துதல்			
	• ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.		√	
	• கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் •	√		
	• நிர்மாணிக்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட அலுவலகக் கட்டிடங்கள்	√		
	• நிர்மாணிக்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட வாசஸ்தளங்கள்	√		
10	இலங்கையின் மொத்தப் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு பங்களிப்பு செய்தல்			
	• வருடாந்த வருமானம்	√		
	• உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள்			√
	• வெளிநாட்டு சுற்றுலா பயணிகள்			√

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களின் சுருக்கமான விளக்கம்

இலக்குகள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம்		
			0-49	50-74	75-100
வறுமை ஒழிப்பு	இலங்கையில் பூவளர்ப்போரை வலுவூட்டல்	• அமைக்கப்பட்ட பூ வளர்ப்போர் சங்கங்கள் • ஒழுங்கு செய்து நடாத்தப்பட்ட மலர்க் கண்காட்சிகள் • ஒழுங்கு செய்து நடாத்தப்பட்ட செயலமர்வுகள் • தொழில்நுட்ப பிரச்சினைகளை தீர்பதற்காக நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் வெளிக்கள மேற்பார்வைகள். • காலத்திற்கு காலம் எழுகின்ற பிரச்சினைகள் தொடர்பிலான ஆராய்ச்சி நடவடிக்கைகள்			√
சகலருக்கும் சமமான கல்வி வாய்ப்பை உறுதிப்படுத்தி தரமான கல்வியை வழங்குவதன் மூலம் எல்லா வயதுமட்டத்தினருக்கும் கல்வியைப் பெறும் சந்தர்ப்பத்தை வழங்குதல்	வேறுபட்ட வயது மட்டதினை கொண்டுள்ள பொதுமக்களுகு தாவரப் பாதுகாப்பு பற்றி தெளிவூட்டல்	• சூழல் தாவரங்கள் மற்றும் உயிரியியல் பல்வகைமையினப் பாதுகாத்தல் தொடர்பில் நடாத்தப்பட்ட தெளிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்.			√
	இளைஞர் யுவதிகளுக்கு சுய தொழில் வாய்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்	பூங்காவினுள் தொழில்சார் பயிற்சி திட்டங்களை நடாத்தி அதனூடாக இளைஞர் யுவதிகளை பயிற்றுவித்தல் (NVQ-3.4) பாடநெறிகளின் எண்ணிக்கை			√
உயிரியல் பல்வகைமையின் பாதுகாப்பு,பாலைவனமாதலை தடுக்கும் விதத்தில் தாவர வளத்தைப் பாதுகாத்து சூழல் சமநிலையைப் பேணல்	வெளிவாரிப் பேணுகை	• வெளிவாரிப் பேணுகை முறைமையினூடாக பாதுகாக்கப்பட்டுள்ள தாவரங்கள் • அழிவுற்ற தாவரங்களை மீண்டும் வாழ்விடங்களில் பேணிப் பாதுகாத்தல் • தெளிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை • தெளிவூட்டப்பட்ட நபர்களின் எண்ணிக்கை			√
	தாவரவியல் பூங்கா வருவான அதிகரிப்பு	• பார்வையாளர்களின் எண்ணிக்கை • வருடாந்த வருமானம		√	

5.2.1 இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களின் சுருக்கமான விளக்கம்

- திணைக்களத்தின் பூ வளர்ப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் மத்திய மட்டத்திலுள்ள சுமார் 8500 தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டல் செய்யப்பட்டுள்ளது. இதன் ஊடாக நிலையான அபிவிருத்தி இலக்கு 01 மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வறுமை ஒழிப்பு எனும் இலக்கை அடைந்து கொள்வதற்கான பங்களிப்பை வழங்க முடிந்துள்ளது. இத் திட்டத்தில் கூடுதலான பெண்கள் பங்காளர்கலாக உள்ளதால் பெண்களை வழுவூட்டும் செயற்பாடும் இடம்பெருகின்றது. இதன் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்கு 05 ஊடாக எதிர்பார்க்கப்படுகின்ற ஆண் பெண் சமத்துவம் எனும் இலக்கை அடைந்து கொள்வதற்கான பங்களிப்பை வழங்க முடிந்துள்ளது.மேலும் சுய தொழில்வாய்ப்பு மற்றும் வியாபார வாய்ப்புக்கள் உருவாகியுள்ளதால் நாட்டினது பொருதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்ய முடிந்துள்ளதுடன் நிலையான அபிவிருத்தி இலக்கு 08 மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நிலையான பொருளாதார வளர்ச்சி செயற்திரன் மிக்க தொழில் உருவாக்கம் போன்ற இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நேரடிப் பங்களிப்பை வழங்க முடிந்தது.
- பூங்காவினுள் NVQ-3,4 மட்டத்திலான தொழில் பயிற்சி பாடநெறிகள் மூலம் இளைஞர் யுவதிகளை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுமார் 11,386 மாணவர்களுக்கு பல்வேறுபட்ட தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.இதன் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்கு 08 இன் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்ற சகலருக்கும் சிறப்பான கல்வியை உறுதிசெய்தல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குதல் எனும் இலக்கினை அடைந்து கொள்வதற்கு வாய்பளிக்கப்பட்டுள்ளது.
- விஷேடமாக சகல தாவரவியல் பூங்காக்களிலும் தாவர வெளிவாரிப் பேணுகை மற்றும் அழிவுற்ற தாவரங்களை மீண்டும் வாழ்விடங்களில் நடுகை செய்தல் என்பவற்றின் ஊடாக தாவரங்களின் உயிரியல் பல்வகைமையினைப் பாதுகாப்பதற்கான பங்களிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 629,916 மரக் கன்றுகளை உற்பத்தி செய்யப்பட்டதன் ஊடாக தாவரப் பாதுகாப்பிற்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.இதனூடாக நிலையான அபிவிருத்தி இலக்கு 15 இன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற பூலோக சுற்றுச்சூழல் பாதுகாப்பு,நிலைபேரான பயன்பாடு,வனப்பாதுகாப்பு,பாலைவனமாக்கலைத் தடுத்தல்,நிலச் சீரழிவைத் தடுத்தல் மற்றும் பல்வகைமையினைப் பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு நேரடிப் பங்களிப்பை வழங்க முடிந்துள்ளது.
- தாவரவியல் பூங்காக்களின் மொத்த வருமானத்தை 2019 இல் 668 மில்லியனாக அதிகரிப்புச் செய்து இலங்கையின் நிலையான பொருளதார வளர்ச்சிற்கு நேரடியான பங்களிப்பை வழங்கியதன் ஊடாக நிலையான அபிவிருத்தி இலக்கு 08 இன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நிலையான பொருளதார வளர்ச்சி மற்றும் சிறந்த தொழில்வாய்புக்களை உருவாக்குதல போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நேரடியான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 06 –மனிதவள விபரம்

6.1 பதவியணியின் முகாமைத்துவம்

	ஆங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	புதவிவெற்றிடம்/(அதிகப்படியான)**
சிரேஸ்ட	34	24	10
மூன்றாம் நிலை	9	3	6
இரண்டாம நிலை	189	173	16
ஆரம்ப நிலை	683	549	134
மொத்தம்	**915**	**749**	**166**

6.2 குறைவான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்கையின் பாதிப்புகள்.

- விஞ்ஞான பூர்வ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களின் பற்றாக்குறையானது தாவரவியல் பூங்காக்களில் தாவர பாதுகாப்பு மற்றும் பிற அறிவியல் தொழில்நுட்ப மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை திறமையாக மேற்கொள்வதில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

- நிறுவனத்தின் செயல்திறனை உயர் மட்டத்தில் பராமரிக்க தற்போதுள்ள அதிகாரிகளிடம் உச்ச ஒத்துழைப்பை பெரல்
- ஆரம்ப நிலைக்கு ஒப்பந்த அடிப்படையில் சேவையை பெறுவதன் மூலம் சம்பந்தப்பட்ட ஊழியர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்து பூங்காக்களின் செயல்பாடுகளை முறையாக பராமரித்தல்.

. 6.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டத்தின் காலம்	மொத்த முதலீடு		பயிற்சித் திட்டத்தின் வகை (உள்நாடு / வெளிநாடு)	பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாடு (ரூ.)	உள்நாடு (ரூ.)		
அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III வகுப்பின் பதவிக்கு நியமனம் - ஒரு நாள் சேவை ஆரம்பம் பற்றிய பயிற்சி	08	2022.01.21 மு.ப 10.00 -. பி.ப 4.00	100,80.00	-	**உள்நாடு**	பொதுவான அலுவலகக் பொறுப்புக்கள், அடிப்படை நிதிச் செயற்பாடுகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் பற்றிய அடிப்படை அறிவு
புற்றரிக் கார் சாரதிகளுக்கான :- சேவை ஆரம்பம் பற்றிய பயிற்சி	18	2022-01-31 8.30 – 4.00	180,50.00	-	**உள்நாடு**	பொதுவான அலுவல பொறுப்புக்கள் பற்றிய அடிப்படை அறிவு
முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி திட்டம்	10	2022.03.03 9.30- 4.15	-	-	**உள்நாடு**	பொதுவான அலுவலகக் கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய அடிப்படை அறிவு
பூங்கா அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி	10	2022-03-259.00 – 3.30	-	-	**உள்நாடு**	பொதுவான அலுவலகக் கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய அடிப்படை அறிவு
அரச ஊழியர்களின் நேர்மறையான சிந்தனை மேம்பாடடுப் பயிற்சி	78	2022-03-25 8.00 – 4.30	රු.98,900.00	-	**உள்நாடு**	நேர்மறையான சிந்தனை மேம்பாடடு
ஆரம்ப பரிசோதனை	49	2022-03-28 8.30 – 5.00	44,585.00	-	**உள்நாடு**	பொதுவான அலுவல பொறுப்புக்கள் பற்றிய அடிப்படை அறிவு

